# பகலாமுகி தேவி, நல்கேடா, உஜ்ஜயினி மாவட்டம்

## சாந்திப்பிரியா



இந்திய நாட்டில் முக்கியமாக ஹிமாச்சலப் பிரதேசம், அஸ்ஸாம், ஒரிஸ்ஸா, திருபுரா மற்றும் மத்தியப் பிரதேசம் போன்ற மானிலங்களில் – அதாவது மலை வாழ் மக்களும், நாடோடிகளும் நிறைந்து இருந்த இடங்களில் தந்திர, மந்திர சக்தியை உள்ளடக்கிய ஆலயங்கள் பல உள்ளன. அவை அனைத்தையுமே அந்த காலத்தில் வாழ்ந்திருந்த அரசர்களினால் நிர்மாணிக்கப்பட்டு வழிபடப்பட்டு வந்துள்ளன. அப்படி கட்டப்பட்டு உள்ள ஆலயங்கள் மிகப் பெரிய

ஆலயங்கள் அல்ல. நமது கிராமங்களில் காணப்படும் கிராம தேவதைகளின் ஆலயங்களைப் போல மிகச் சிறியதாகவும், சில மேல் கூரைக் கூட இல்லாமல், சில மரங்களின் அடியிலும் நதிக் கரைகளிலும் கட்டப்பட்டு உள்ளன. அப்படிப்பட்ட ஆலயங்கள் மத்தியப் பிரதேசத்தின் உஜ்ஜயினி மாவட்டத்தில் நிறையவே உள்ளன. காரணம் அங்கு ஓடிக் கொண்டு இருந்த பல நதிகள் புனிதமான நதிகள் என்று கருத்தப்பட்டதே காரணம். மேலும் அந்த இடங்களில் ஆட்சி புரிந்து வந்த பல மன்னர்கள் தந்திர, மந்திர சக்திகளைக் பயன்படுத்தி தமது எதிரிகளை அடக்கி , ஆட்சியை விஸ்தரித்துக் கொண்டு இருந்தார்கள்.

பொதுவாகவே உஜ்ஜயினியை ஆண்டு வந்திருந்த மன்னன் விக்ரமாதித்தியன் மந்திர, தந்திர சக்திகள் அடங்கிய ஆலயங்களை பல இடங்களிலும் நிறுவியதாக ஒரு கருத்து உண்டு. ஏன் எனில் அவர் மந்திர, தந்திர சக்திகளை பெரிதும் நம்பியவர் என்று கூறுவார்கள். ஆகவே அவர் அடிக்கடி மந்திர சக்திகளை கொண்டிருந்த ஆலயங்களுக்குச் சென்று பூஜைகள் செய்து வழிபடுவது வழக்கமாம். அதனால்தான் அவர் ஆண்டு வந்த மத்தியப் பிரதேசத்திலும் அப்படிப்பட்ட ஆலயங்கள் நிறையவே காணப்படுகின்றன. அவற்றில் ஒன்றே பகலாமுகி தேவி ஆலயம் ஆகும்.

உஜ்ஜயினியில் இருந்து சுமார் 90 கி.மீ தொலைவில் உள்ள நல்கேடா என்ற சிற்றூரில் நர்மதை நதியின் கரையைத் தொட்டபடி உள்ளது அந்த ஆலயம். அந்த ஆலயத்தைப் பற்றி சிறு வரலாறு அங்குள்ள ஒரு கல்வெட்டில் இருந்து தெரிய வருகின்றது. மற்றபடி ஆலயம் எப்பொழுது கட்டப்பட்டது என்ற விவரம் இல்லை. இந்த ஆலயத்தைத் தவிர மத்தியப் பிரதேசத்தின் ததியா எனும் கிராமத்திலும், ஹிமாச்சலப் பிரதேசத்திலும் பகலாமுகி ஆலயங்கள் உள்ளன.

சென்னையிலும் அவளுக்கு ஒரு ஆலயம் உள்ளதான செய்தியும் உள்ளது .

**பகலாமுகி ஆலய பெருமை**

உஜ்ஜயினியில் உள்ள பகலாமுகி ஆலயத்தில் உள்ள தேவியின் சிலை 2500 ஆண்டுகளுக்கு முட்பட்டது எனவும், பூமியில் இருந்து தானாக வெளி வந்தது எனவும் கூறப்படுகின்றது. 1815 ஆம் ஆண்டில் ஆலயத்தில் உள்ள தேவியின் பிராகாரத்தைச் சுற்றி பதினாறு தூண்கள் எழுப்பப்பட்டதாக கல்வெட்டு செய்தி கூறுகின்றது. குறிப்பிட்ட எதோ ஒரு காரணத்திற்காக மந்திர, தந்திர சாஸ்திரத்தின் அடிப்படையில் பதினாறு தூண்கள் எழுப்பப்பட்டு இருந்திருக்க வேண்டும் என ஒரு சாஸ்திர பண்டிதர் கூறினார். இன்னொருவர் அந்த பதினான்கு தூண்களும் அந்த ஆலயத்தின் தேவியைக் காத்து நிற்கும் பூத கணங்களாக இருந்திருக்கலாம் என்றும், ஒவ்வொரு தூணும் பகலாமுகி தேவியின் மந்திர சக்தியை ஆவாஹனம் செய்து உள்ளடக்கி வைக்கப்பட்டு இருந்தவை என்பதாகவும், அதன் காரணம் அந்த ஆலயத்தின் மாந்த்ரீக சக்தியை அதிகரித்து வைப்பதற்காகவே அல்லது தாந்த்ரீக சக்தி விதிமுறைகளுக்கு உட்பட்டு அமைக்கப்பட்டு இருந்திருக்கலாம் என்றும் சிலர் கூறுகிறார்கள். மேலும் சிலர் அந்த தூண்கள் தேவியை காக்கவும் காவல் தேவதைகள் என்பதாக கூறுகின்றார்கள் . ஆனால் கருவறைக்கு எதிரில் உள்ள நுழைவாயில் முற்றத்தில் பதினான்கு தூண்கள் அமைக்கப்பட்டுள்ளதின் காரணம் என்ன என்பது தெரியவில்லை. வேறு எந்த ஆலயத்திலும் இதைக் காண முடியாது. சில புராணச் செய்திகளின் அடிப்படையில் மகாபாரதப் போரின்போது குருஷ்ஷேத்திரத்தில் நடைபெற்ற யுத்தத்தில் கௌரவர்கள் வெற்றி பெற வேண்டும் என்பதற்காக, கிருஷ்ண பகவானின் அறிவுரைப்படி தர்மர்(யுதிஷ்திரர்) பகலாமுகி தேவியை இந்த இடத்தில் வந்து வழிபட்டார் என இங்குள்ளவர்கள்

கூறுகின்றனர். அதன் காரணம் அவளே அவரது மூதையோரின் குலதெய்வம் என்பதாக கிருஷ்ண பகவான் கூறினாராம். இதுவும் வாய்மொழிக் கதையாகத்தான் கூறப்படுகின்றது.

## தேவியின் அவதாரம்

பகலாமுகி எப்படி அவதரித்தாள் என்பதற்கு கூறப்படும் காரணக் கதை இது ஆகும். சத்யுகத்தில் ஒருமுறை மகா பிரளயம் ஏற்பட்டு உலகமே அழிந்து விடும் நிலைக்குச் சென்று விட்டபோது அதனால் கவலையுற்ற பகவான் விஷ்ணு, சௌராஷ்டிரத்தில் ஒரு இடத்தில் சென்று தனிமையில் தவத்தில் அமர்ந்து கொள்ள, அப்போது அவர் நாபியில் இருந்து வெளி வந்த ஜோதியும், ஆகாயத்தில் இருந்து வந்த நட்சத்திர ஒளியும் ஒன்றிணைந்து ஒரு தேவி வெளியே வந்தாள். அவளே பகலாமுகி தேவி ஆகும். அப்படி வெளியான தேவி பிரளயத்தின் சீற்றத்தை அடக்கி உலகை அழிவில் இருந்து காப்பாற்றினாள்.

## தேவியின் ஸ்வரூபம்

கொக்கு போன்ற முகத்தைக் கொண்ட இந்த தேவியை வால்கமுகி என்றும் கூறுகிறார்கள். பத்து மந்திர, தந்திர சக்திகளைத் தரும் தேவிகளான தச மஹா வித்யா தேவிகளில் இவளும் ஒருவள். நான்கு கைகளைக் கொண்ட இவள் அமிர்தக் கடலில் தங்க நிறத்திலான சிம்மாசனத்தில் அமர்ந்து மஞ்சள் நிறத்தில் காட்சி தருபவளாம். ஒரே கல்லில் மூன்று முகங்களைக் கொண்டு காணப்படும் தேவிக்கு ஒரு முகத்தில் மூன்று கண்கள் உள்ளன. நல்கேடாவில் உள்ள சிலையோ கழுத்துவரைதான் உள்ளது. ஆகவே மும்மூர்த்திகளை உள்ளடக்கிய முக்கண்ணராகிய சிவபெருமானின் அவதாரமே அந்த தேவி என்றும் அர்தநாரீஸ்வரரைக் குறிக்கும் சிலையே அது எனவும் கூறுகின்றனர். பகலாமுகி தேவியின் மேனி பொன்னிரமானது. அவளுக்கு பிடித்த

வண்ணம் மஞ்சள் நிறம். அவளே மந்திர, தந்திர சக்திகளின் தெய்வம். மஞ்சள் நிற தாமரைப் பூக்களின் மஞ்சத்தில் அமர்ந்து கொண்டு இருப்பவள் என அவளுடைய ரூபத்தை வர்ணிக்கின்றனர்.

## தேவியின் மகிமை

பகலாமுகி தேவியை வணங்கி ஆராதித்தால் எதிரிகள் அடங்குவர், தடைகள் விலகும், வழக்குகளில் வெற்றி கிட்டும், நமக்கு தொல்லைத் தரும் எதிரிகள் செயல் இழப்பார்கள், பில்லி சுனியங்களினால் ஏற்படும் அபாயங்கள் விலகும் என்றெல்லாம் நம்புவதால் பலரும் இங்கு வந்து வேண்டுதல்கள் செய்கின்றனர். அவளை ஆராதித்துத் துதிப்பத்தின் மூலம் எதிரிகளின் செயல்கள் அனைத்தும் அடங்கி விடுமாம். முக்கியமாக அவள் எதிரிகளின் நாக்கு வன்மையை, சிந்திக்கும் திறனை ஒழித்து விடுவதினால் அவர்களால் கடவுளை வேண்டிக் கொண்டு மந்திர உச்சாடனைகளை செய்ய முடியாமல், தமது சகாக்களுக்கு உத்தரவுகள் போட முடியாமல் அடங்கி விடுவார்கள். அவளை ஆராதிக்கும் மந்திரத்தில் ”தேவியே, என்னுடைய எதிரிகளின் நாக்கை நாக்கையும் மனதையும் செயல் இழக்க வைத்து, எனக்கு எதிராக எதையும் செய்ய முடியாமல் செயலிழக்கச் செய்ய வேண்டும்” என்ற அர்த்தத்தில் ஆராதிக்கின்றார்கள்.

ஆனால் இந்த மந்திர உச்சாடனைகள் தகுந்த முறையில் உச்சரிக்கப்பட வேண்டும், குறிப்பிட்ட முறையில் ஆராதிக்க வேண்டும், தேவையற்ற தீய செயல்களுக்கு செய்யக் கூடாது போன்ற பல விதி முறைகள் உள்ளன என்பதினால், இந்த மந்திரங்களைக் கூறி அவளை ஆராதிக்கும் முன்னால் தக்க குருவின் மூலமே தீட்ஷை எடுத்துக் கொண்டு முறையாக செய்ய வேண்டும். தவறாக உச்சாடனைகள் செய்தால் அவை அதை ஆராதிப்பவரையே அழித்து

விடும். தேவியின் சக்தியை எடுத்துக் காட்டும் விதத்தில் அமைந்துள்ளது ஒரு கதை. முன்னர் மதன் என்றொரு அசுரன் அளவிடமுடியாத சக்திகளை, முக்கியமாக வாக்கு சித்தியை பெற்று இருந்தான். அதைக் கொண்டு அவன் மக்களினால் பூஜா மந்திர உச்சாடனைகளைக் கூட செய்ய முடியாமல் தடுத்து வந்தான். அதனால் அனைவருடைய சித்திகளும், பூஜை மந்திர ஒலிகளும் நின்றன. தேவர்களை கொடுமைபடுத்தினான். ஆகவே அவர்கள் பகலாமுகி தேவியை சந்தித்து தம் இன்னலைக் கூறி தம்மை காத்தருளுமாறு அவளிடம் வேண்டிக் கொள்ள, பகலாமுகி தேவி அந்த அசுரன் மீது படையெடுத்து, அவனுடன் சண்டையிட்டு அவன் நாக்கைப் பிடுங்கி எறிந்து அவனுடைய வாக்கு சக்தியை அழித்தாள். நாக்கு இருந்தால்தானே எதையும் உச்சரிக்க முடியும். ஆனால் அவன் நாக்கைப் பிடுங்கி கொல்லப்படும் முன்னால் அவன் அவளை மனதார ஆராதித்தான். ஆகவே அவன் இறக்கும்போது கேட்ட வரத்தின்படி அவள் அவனை வதம் செய்யும் காட்சியுடன் இருக்கும் தன்னை தனது பக்தர்கள் அந்த கோலத்திலேயே வழிபட வேண்டும் என்று கூறி அவனுக்கும் முக்தி கொடுத்தாளாம். அதனால்தான் அவன் நாக்கைப் பிடுங்கிக் கொள்ளும் காட்சியில் உள்ள படத்தையும், சிலையும் சில இடங்களில் உள்ள மக்கள் ஆராதிக்கின்றார்கள்.

அஸ்ஸாம் , பீஹார் மற்றும் நேபாளத்தில் உள்ள பகளாமுகி ஆலய தேவிகளின் கதை இந்த ஆலயத்தின் தேவியின் கதையில் இருந்து மாறுபட்டு உள்ளன. உஜ்ஜயினியில் இருந்து நல்கேடாவிற்கு செல்ல பஸ்களும் டாக்ஸிகளும் உள்ளன. பயண நேரம் சுமார் இரண்டு மணி நேரம் ஆகும்.

Also read this in the following link: ( https://santhipriya.com/2012/05/ujjain-bagalamuki-temple.html )

# Bagalamuki Temple, Nalgeda, Ujjain district



## Santhipriya

Few temples in India are well known for the occult and tantric powers they possess. In states like Assam, Tripura, Orissa, and Madhya Pradesh such temples are seen where tribesmen and nomads lived in the earlier saga. Those tantric temples were built by the then rulers to gain mystic and occult powers. The temples were very small and resembled like that of Village guardian temples. Most of them even had no roofing on top and were seen constructed under the shades of the trees and river banks and few of such temples are seen in the river banks of Ujjain district of Madhya Pradesh because the rivers flowing through Ujjai was considered to be sacred. The other reason being the rulers of

those areas subdued their enemy rulers by the magical and tantric powers they possessed while expanding their rule.

It is generally believed that during the rule of King Vikramaditya who was the ruler of Ujjain, few such unique temples have been established possessing mystic and tantric powers because he evinced greater faith in such practices. He used to regularly visit such temples to offer worship to gain occult powers for himself. May be, his influence laid the path for the establishment of many such temples in Madhya Pradesh and one amongst them was Bagalamuki Devi temple in Nalgeda village.

This temple is found in the river bank in Nalgeda in the district of Ujjain. The brief history of the temple is known through a small culvert found in the temple, otherwise no other written texts are available and all other stories connected to Bagalamuki Devi and her temple has been folklores only. Few more temples for Bagalamuki Devi are also seen in the Dadiya district of Madhya Pradesh, Himachal Pradesh and Tamilnadu.

## The glories of Bagalamuki Devi temple

It is claimed that the idol of the Devi enshrined in the temple is said to be 2500 years old and self appeared in the same spot where it is installed. As per some inscriptions, in the year 1815, fourteen pillars have been erected around the courtyard of the Goddess before her sanctum in the temple and one of the scholars claim that the pillars may have been imbibed with magical and tantric powers either to enhance the tantric powers of the temple or based on the canonic principles of tantrism. It is also claimed by some that the pillars could

have been the Deva ganas who are guardian deities of the Devi. However the real reason for erecting those pillars are unknown and such structure is also not seen in any other temples of that small. According to one of the legends, which again is heard as folklore, one of the Pandava brothers Yudhishtira (Dharmar) came to this temple and offered worship to the Goddess on the advice of Lord Krishna himself, seeking her blessing to win the war against Gauravas because it was the Kuldevatha of his predecessors.

## Incarnation of the Goddess

There is a folklore on the incarnation of this Goddess. As per the folklore once upon a time in Satya Yuga, the universe was on the verge of extinction due to a severe deluge. In order to save the universe, Lord Vishnu went to Saurashtra and sat in tapas in an isolated place when divine rays emerged out of his navel merged with the flash rays of a star from the sky and it became a female Goddess who was none but Bagalamuki Devi and she suppressed the wrath of the deluge to save the universe from destruction.

## The aspect of the Goddess

Bagalamuki Devi is crane like faced, three eyed and four armed goddess, also called as Valkamuki. Her body is depicted only upto the neck in Nalgeda.

She is one of the ten Goddesses amongst the Dasa Maha Vidya Devis who posess great magical and tantric powers. This yellow coloured Goddess is found seated on a golden throne in the Sea of Nectar. Since she has three eyes, it is claimed that she is possessed with the powers of Trimurthis- Lors Shiva, Vishnu and Brahma and controller and Goddess of tantric and occult powers. This Devi is fond yellow, hence seated on a yellow lotus.

## Greatness of the Goddess

Many devotees come here to pray the Devi to win over their enemies and to get freed of trouble from the evil spirits especially those afflicted with the evil effects of black magic and sorcery. Since she is also controller of the tongue, with the powers gained through her worship, one can inactivate the minds and tongue of their enemies and prevent them from chanting mantras to control others or to even give orders to their subordinates to do anything. She is worshiped with a specific mantra whose brief meaning is "oh, Goddess, inactivate the tongue and mind of my enemies to weaken them from harming me".

However such rituals or prayers seeking the grace of the Devi should not be performed by an individual unless he had taken proper diksha from a well versed Guru because there are several restrictions and regulations involved in this ritual including not to be used with ulterior motive to cause evil effects on someone, which otherwise will have reverse effect on those attempting to perform the ritual. There is an interesting story on the power of the Goddess. Several thousand years ago there was a demon called Madan who with the tantric powers he possessed prevented others from chanting slogans or praying divines. He also unnecessarily tortured the celestial and Devaganas. If anyone defied him and chanted prayers, with the powers he possessed, he would inactivate their tongue and mind. Hence when the celestial prayed to Bagalamughi Devi to save them from the clutches of demon Madan, the Goddess waged a war against him and killed him by pulling out his tongue. Before dying, when he sought a boon from the Devi that people should pray her in the same posture of her pulling out his tongue, she conceded to his request and blessed

him.Therefore in some places she is  worshipped by her devotees in the same posture of her pulling out the tongue of the demon.

Also read this in the following link: https://santhipriya.com/2012/05/**ujjain-bagalamuki-temple**.html